4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 203/2019 நாள்: 18.09.2025 வா.சா.2 – வீரண்ணன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னை சாட்சியம் அளிக்க 4 முதல் 5 மாதங்களுக்கு முன்பு அழைத்தார். அப்போது வாதி வழக்கு பற்றிய விவரங்களை என்னிடம் கூறினார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலம் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது, அதிலுள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். வாதி மருத்துவராக உள்ளார். மேற்படி வாதியை சுமார் 5 முதல் 6 வருடங்களாக தெரியும். வாதி முன்பு உடுமலைபேட்டை மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தார், தற்போது எங்கு பணிபுரிகிறார் என்று எனக்கு தெரியாது. வாதி வட்டி வரவு செலவு செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதி தற்போது எங்கு வசித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. நான் திண்டுக்கல் மாவட்டம், தேவரப்பன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கடனுறுதி சீட்டை வாதியின் உடுமலைபேட்டை மருத்துவமனையில் வைத்து எழுதினேன். மேற்படி கடனுறுதி சீட்டை எழுதும் போது பிரதிவாதி மற்றும் வீரய்யன் ஆகியோர்கள் உடனிருந்தார்கள். வீரய்யாவை நான் தான் அழைத்து வந்தேன், என்னை பிரதிவாதி அழைத்து வந்தார். பிரதிவாதி ரவிச்சந்திரனை எனக்கு கடனுறுதி சீட்டை எழுதுவதற்கு முன்பாக சுமார் 2 முதல் 3 ஆண்டுகளுக்கு முன்பு தெரியும். பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது, ஆனால் அவர் கடை வைத்திருக்கும் இடம் தெரியும். உடுமலைபேட்டை அனுஷம் தியேட்டர் அருகில் பிரிமியர்

சொட்டுநீர் பாசனம் சம்பந்தப்பட்ட கடை வைத்திருந்தார். ரொம்ப நாள் ஆகிவிட்டதால் தற்போது சரியாக ஞாபகம் இல்லை. கடனுறுதி சீட்டில் ஒரு சாட்சி கையொப்பம் போட்டார், நநான் எழுதியவர் என்ற முறையில் நானும் சாட்சி கையொப்பம் போட்டேன். சாட்சி கையொப்பம் போட்ட வீரய்யா எங்கள் ஊரைச்சேர்ந்தவர் தான். கடனுறுதி சீட்டில் நான் அடித்தல், திருத்தல் செய்தேனா என்றால் பல நாட்கள் ஆகிவிட்டதால் தற்போது ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார், பொதுவாக அடித்தல், திருத்தல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. என்னிடம் காட்டம் கடனுறுதி சீட்டு நான் எழுதியது தான், அதில் 2019 என்று குறிப்பிட்டுள்ள எழுத்தில் அதில் 0 என்று இடைசெறுகலாக எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி கடனுறுதி சீட்டிற்கு மாதிரி கடனுறுதி சீட்டு எதுவும் எழுதவில்லை. கடனுறுதி சீட்டு எழுதப்பட்ட உடனேயே பிரதிவாதிக்கு ரொக்கமாக கடன் தொகை வழங்கப்பட்டது. மேற்படி ரொக்க தொகையை ரூ.500 நோட்டுகளாக வாதி, பிரதிவாதிக்கு கொடுத்தார். கடனுறுதி சீட்டு காலை 10 முதல் 11 மணியளவில் எழுதப்பட்டது. வாதிக்கு இந்த வழக்கு தவிர வரவு செலவு சம்பந்தப்பட்ட வழக்கு வேறு நீதிமன்றத்தில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எத்தனை கடனுறுதி சீட்டு இதற்கு முன்பு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் இதற்கு முன்பு எழுதிக்கொடுத்தது இல்லை. பத்திர ஆவணம் எழுதுவதற்கு எனக்கு உரிமம் இல்லை. கடனுறுதி சீட்டில் உள்ள வாசகங்களை பிரதிவாதி சொல்லி எழுதினேன். வாதி திண்டுக்கல்லில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி சொல்ல வாதி சொல்லி வரவில்லை, நானாக தான வந்தேன். கடனுறுதி சீட்டு எழுதியதாக சொல்லப்படும் நேரத்தில் பிரதிவாதி அங்கு இல்லை என்றும், வாதி திண்டுக்கல்லில் பணிபுரிவதால் அவருக்கு ஆதரவாக அதே மாவட்டத்தை சேர்ந்த நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மருத்துவரை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் பிரதிவாதி மூலமாக தெரியும். பிரதிவாதியிடம் எனக்கு

**தற்போது பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.